இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 313 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 09 – ஞாயிற்றுக்கிழமை 23 ஜூன் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 313 : Thiruvalluvar Year - 2055 - Aani 09 - Sunday 23 June 2024 - Dak 12 Pages ₹ 5.00



## காட்டுமன்னார் கோயில் - மயிலாடுதுறை வட்டங்களில் - ரூ. 93 கோடியில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே - தரைகீழ் தடுப்பணைகள்!

### இராணிப்பேட்டை மாவட்டம் – வாலாஜா, ஆற்காடு வட்டங்களில்

# ரூ.200 கோடி மதிப்பில் - பாலாறு அணைக்கட்டு புனரமைக்கப்படும்!

### சட்டப் பேரவையில் – நீர்வளம், இயற்கை வளங்கள் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில்

## ரூ.775 கோடி மதிப்பில் – அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.6.2024) காணொலிக் காட்சி வாயிலாக, கள்ளச் சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வருவாய் நிருவாக ஆணையர். கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை மாநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூன் 23-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், நீர்வளம் மற்றும் இயற்கை வளங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் துரைமுருகன் அவர்கள், “மயிலாடுதுறை வட்டம், சித்தமல்லி கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ. 93 கோடி மதிப்பீட்டில் தரைகீழ் தடுப்பணை அமைக்கப்படும்” - “இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா மற்றும் ஆற்காடு வட்டங்களில் உள்ள திருமலைச்சேரி மற்றும் புதுப்பாடி கிராமங் களின் அருகே உள்ள பாலாறு அணைக்கட்டு ரூ.200.66 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்” என்பன உள்ளிட்ட பல் வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.**

**அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலுரை வருமாறு: -**

நான் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நீர்வளத் துறை, இயற்கை வளங்கள் (MINES) இரண்டின் மீதும் இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, அதற்குரிய பதிலை நான் அளிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.



விவரங்களைச் சொல்கிறேன். அறிவிக்கப்பட்டவைகள் 84, முடிக்கப்பட்டவைகள் 53, 31 தடுப்பணைகள் கட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது.

அணைக்கட்டுகள் கட்டவேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். 42 அணைக்கட்டுகளை அறிவித்தோம், அதில் 28 முடித்திருக்கிறோம். 14 அணைக்கட்டுகளுக்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி போன்ற மாவட்டங்களில் நூறு ஆண்டுகளிலேயே அதை செய்து முடித்திருக்கிறோம். அதேபோன்று ரூ.280 கோடி மதிப்பீட்டில் 480 நிரந்தரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கானப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் 44 பணிகள் முழுமையாக நிறைவு பெற்றிருக்கிறது. 436 பணிகள் ஐம்பது சதவிகிதம் நடந்திருக்கின்றன.

சென்னையைப் பொறுத்தவரையில் வெள்ளத் தடுப்பிலே முக்கியப் பணியாற்றியிருக்கிறோம். 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.434 கோடியிலே ஒன்பது பணிகளை எடுத்துக் கொண்டோம். அதை சீராக முடித்திருக்கிறோம். 2023-2024 ஆம் ஆண்டு ரூ.231 கோடி, நான்கு பணிகள், அவைகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. ரூ.350 கோடியில் 21 பணிகள் அறுபது விழுக்காடு முடிந்திருக்கின்றன. ரூ.96.5 கோடி, ஒரு பணி, முப்பது விழுக்காடு முடிந்திருக்கிறது.

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வருடமும் PRE-MONSOON, மழை வருவதற்கு

## டெல்டா பகுதிகளில் தூர் வாரும் பணிகள் 91 சதவிகிதம் நிறைவு!

RRR என்று ஒரு திட்டம் எங்களுடைய நீர்வளத் துறையில், மத்திய அரசு 60 விழுக்காடு, மாநில அரசு 40 விழுக்காடு. ஜனவரி 22 முதல் இதுவரையில் நான்கு PHASE காணப்பட்டு ரூ.368 கோடி செலவில் நானூறு ஏரிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 89 ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்பு பணியை முடித்திருக்கிறோம். தற்போது பத்தாவது கட்டமாக நூறு கோடி செலவில் 123 ஏரிகள் எடுக்கப்பட்டு, இருபத்து நான்காயிரத்து ஐநூறு ஏக்கர் பாசனப் பரப்பு பயன் பெறும் வகையில் அதற்கு வேண்டிய மத்திய நிதியோடு நாங்கள் அதை செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம்.

தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று நிறைய பேர் கேட்கிறார்கள். சென்ற முறை தடுப்பணைகள் கட்டிய பெய்யாத மழைப் பொழிந்து அந்த நான்கு மாவட்டங்களையும் சீரழித்துவிட்டது. அப்படி பார்த்தால் அங்கே எல்லா இடங்களிலும் குளங்கள் உடைந்துவிட்டன. அங்கெல்லாம் கோர்வைக் குளம். ஒரு குளம் உடைந்தால் மற்றொன்றும் உடைந்துவிடும். மாபெரும் ஆற்றுப்படுகையான தாமிரபரணியினுடைய கரைகளே காணாமல் போய்விட்டது. அவற்றை சீர் செய்கிற ஒரு மகத்தானப் பணி நீர்வளத் துறையின்மீது சுமத்தப்பட்டது. அங்கே பார்த்தால், அதை தற்காலிகமாகச் சீரமைப்பது, PERMANENT ஆக சீரமைப்பது என்று இரண்டு வகைகளாகப் பிரித்தோம். 1,646 தற்காலிகப் பணி செய்ய வேண்டிய இடங்கள் ரூ.88 கோடி செலவிலே போர்க் கால அடிப்படை முன்பாகவே செய்கின்ற பணிகளைச் சீராகச் செய்ததன் விளைவாக வெள்ள நீர் விரைவாக வடிந்திருக்கிறது. இந்த ஆண்டு ரூ.30.5 கோடி செலவில் PRE-MONSOON பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

காவேரி டெல்டாவைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வருடமும் காவேரி டெல்டா சரியான நேரத்தில் தூர்வாரப்பட்டு, தண்ணீர் கடைமடை வரை சென்றடைய வழிவகுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூ.110 கோடி செலவில் 5,338 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரி இருக்கிறோம். மார்ச் மாதம் முதல் மழை பெய்தது. இதுவரை 95 விழுக்காடு முடிந்திருக்கிறது. 30.6.2024-க்குள் முழுமையாக முடிந்துவிடும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### கள்ளக்குறிச்சி சம்பவம்: அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுகிறது!

# சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை!

### சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

சென்னை, ஜூன் 23 -

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட்டு வருவதால் சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், செய்தியாளர்களைச் சந்தித்த சட்டத் துறை அமைச்சர் ரகுபதி, கள்ளக்குறிச்சி சம்பவம் வருத்தத்திற்கு உரியது என்றார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் எதிர்க்கட்சியினர் இச்சம்பவத்தை அரசியலாக்கி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

கேள்வி நேரம் முடிந்த பின் எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என பேரவைத் தலைவர் கூறிய பின்பும், அவர்கள் அமளியில் ஈடுபட்டதாக அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில், சாத்தான்குளம் தந்தை மகன் படுகொலை தொடர்பாக அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமி உண்மையை மறைத்து பொய் கூறினார் என்றும், ஃபெலிக்ஸ் உடல் நலக்குறைவால் இறந்ததாக அறிக்கை விடுத்தார் என்றும் அமைச்சர் ரகுபதி கூறினார்.

அதற்காகவே அப்போது சி.பி.ஐ. விசாரணை கோரியதாகவும் அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

ஆனால், கள்ளக்குறிச்சி சம்பவத்தில் அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுவதால் சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை என்று அமைச்சர் ரகுபதி கூறினார்.

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் யார் தவறு செய்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் கூறியுள்ளதை சுட்டிக்காட்டிய அமைச்சர் ரகுபதி, கள்ளச்சாராயம் விற்பவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

### 4 மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்!

## பணிகளைத் தொடங்கியது தேர்தல் ஆணையம்!

### செப்டம்பர், அக்டோபரில் தேர்தல் நடைபெற வாய்ப்பு!

புதுடெல்லி, ஜூன் 23 -

மக்களவைத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மகாராஷ்டிரா, அரியானா உள்ளிட்ட 4 மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தலுக்கான ஆயத்த பணிகளை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

அரியானா, மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மாநிலங்களில் சட்டமன்ற பதவிக்காலம் முறையே நவம்பர் 3, நவம்பர் 26 மற்றும் ஜனவரி 5 ஆகிய தேதிகளில் நிறைவடையவுள்ளது.

மேலும், ஜம்மு காஷ்மீரில் செப்டம்பர் மாத இறுதிக்குள் தேர்தலை நடத்திமுடிக்க உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, 4 மாநிலங்களிலும் செப்டம்பர், அக்டோபரில் சட்டமன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இந்நிலையில், சட்டமன்றத் தேர்தலுக்கான ஆயத்த பணிகளை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

இதற்காக வாக்காளர் பட்டியலை புதுப்பிப்பதற்கு ஜூலை ஒன்றாம் தேதி தகுதிநாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரிலும் ஜூலை ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலை புதுப்பிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

### யு.ஜி.சி. ‘நெட்’ வினாத்தாள்! ரூ.5 லட்சத்திற்கு விற்பனை!

புதுடெல்லி, ஜூன் 23 –

யு.ஜி.சி. ‘நெட்’ தேர்வுக்கான வினாத்தாள் 5 லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 18ஆம் தேதி, 11 லட்சம் மாணவர்கள் எழுதிய நெட் தேர்வு 19ஆம் தேதி ரத்து செய்யப்பட்டது. டார்க் நெட், டெலிகிராம் சமூக ஊடகங்கள் மூலம் கேள்வித்தாள் விற்பனை செய்யப்பட்டதாக எழுந்த தகவலை தொடர்ந்து இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில், 18 ஆம் தேதி நடைபெற்ற தேர்வின் வினாத்தாள் 16ஆம் தேதி வெளியானது தற்போது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த வினாத்தாள் 5 லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டதாகவும் சி.பி.ஐ. நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. நெட் தேர்வுக்கான கேள்வித்தாள் தயாரித்தவர்களிடமும், அதனை கையாண்ட தேசிய தேர்வு முகமை அலுவலர்களிடமும் சி.பி.ஐ விசாரணை நடத்தி வருகிறது.

### கள்ளக்குறிச்சி சம்பவம்: இதுவரை

## 8 பேர் கைது! 3 பேர் மீது கொலை வழக்குப் பதிவு!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் நடவடிக்கை!

சென்னை, ஜூன் 23 -

விஷச் சாராயம் தயாரிக்க மெத்தனால் விநியோகம் செய்ததாக கைது செய்யப்பட்ட சின்னதுரை, ஜோசப் ராஜா உள்ளிட்ட மூவர் மீது சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இவ்வழக்கில் இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சியில் சட்ட விரோதமாக விஷச் சாராயம் விற்ற சம்பவத்தில், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையிலான தனி நபர் ஆணையம் விசாரணை மேற்கொண்டு வருகிறது. அதேபோல், சிபிசிஐடி காவல்துறையினரும் விஷச் சாராயம் விற்பனையில் ஈடுபட்ட நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் விஷச் சாராயம் விற்ற கண்ணுக்குட்டி என்கிற கோவிந்தராஜ், அவரது மனைவி விஜயா, அவரின் தம்பி தாமோதரன் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், விஷச் சாராயம் தயாரிக்க மெத்தனால் விநியோகம் செய்ததாக சின்ன துரை, ஜோசப் என்கிற ராஜா ஆகியோரும், விஷச் சாராய விற்பனையில் தொடர்புடைய மாதேஷ், ஷாகுல் ஹமீது, ராமர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 8 நபர்களிடம் சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, கள்ளக்குறிச்சி சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள, ராமர், சின்னதுரை, ஜோசப் ராஜா ஆகிய மூவர் மீது சிபிசிஐடி காவல்துறையினர் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர்.